**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8092385

1. District : VELLORE
மாவட்டம்
PS: VIGILANCE & ANTI - CORRUPTION.
காவல்நிலையம்
Year: 2019
ஆண்டு
FIR No.: 12/2019
மு.த.அ. எண்
Date: 21.06.2019
நாள்

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION (AMENDMENT) ACT 2018.
Sections பிரிவுகள்: 7 OF P.C. (Amendment) Act 2018.
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 17.06.19.
நாள் முதல்
Date to : 20.06.2019.
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 21.06.2019
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 07.00 hrs.
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 21.06.2019
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 07.00 hrs.
நேரம்

4. Type of Information : Written/Oral : TYPED WRITTEN COMPLAINT.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o BDO OFFICE, ARAKKONNAM. VELLORE. - 80 kms - NORTHEAST DIRECTION.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : O/o the BDO, ARAKKONNAM, VELLORE.
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : —
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. MUTHURAJA
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ ~~Husband~~'s Name : SHANMUGANATHAN
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1990.
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : INDIAN
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : BUSINESS.
தொழில்
(g) Address : No. 73, 7th Street, Ezhil Nagar, Ayyapakkam, Chennai-77.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) Tmt. JEEVA, DEPUTY BLOCK DEVELOPMENT OFFICER, O/o BLOCK DEVELOPMENT OFFICER, ARAKKONNAM VELLORE DISTRICT. (2) Tr. ESWARAN, PANCHAYAT SECRETARY MOSUR, ARAKKONNAM, VELLORE DISTRICT.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

NO DELAY

Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)

... தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Separate sheet Attached

... offence(s) u/s as mentioned at item No.2 registered the case ... Rank ................... to take up the Investigation / Refused ... on point of jurisdiction.

... பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு ... .......................... பதவி ...................... நிலை ... / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ... படுகிறது.

... correctly recorded and a copy given to the Complainant / ...

... அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் ...

S. Muthuraja 21/6/19.

21/06/19

Signature of the Officer in-charge, Police Station

காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

21.06.2019.

Name: S. VIJAY.

Rank: INSPECTOR OF POLICE.

V & A.C., VELLORE.

**பணிந்து அனுப்பப்படுகிறது:-** வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜய் ஆகிய நான் 21.06.2019-ம் தேதி காலை 07.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் திரு.S.முத்து ராஜா, வயது.29/2019, த/பெ. சண்முகநாதன், எண்.73, 7-வது தெரு, எழில் நகர், அயப்பாக்கம், சென்னை என்பவர் நேரில் ஆஜராகி, திருமதி.ஜீவா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், அரக்கோணம் மற்றும் திரு.ஈஸ்வரன், மோசூர் ஊராட்சி செயலாளர் ஆகியோர் மீது கொடுத்த புகாரை பெற்று என்னுடைய தகவலாளர்களை தொடர்பு கொண்டு எதிரியின் நடத்தை குறித்து விசாரணை செய்ததில் எதிரியானவர்கள், அவர்கள் பணிபுரியும் பகுதியில் உள்ள பொது மக்களிடம் லஞ்சமாக பணம் பெறுவது உறுதி செய்யப்பட்டது. மேலும் புகார்தாரரின் நம்பகத்தன்மை மற்றும் எதிரிகளின் நடத்தை குறித்து விசாரணை செய்ததில் திருமதி.ஜீவா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், அரக்கோணம் மற்றும் திரு.ஈஸ்வரன், மோசூர் ஊராட்சி செயலாளர் ஆகியோர் மீது பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act 2018-ன் கீழ் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருந்தமையால் சென்னை இயக்குநரக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அனுமதிப் பெற்று, புகார்தாரர் திரு.S.முத்துராஜா என்பவர் கொடுத்த புகார் மனுவின் பேரில் இன்று 21.06.2019-ம் தேதி காலை 08.30 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2019 பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act 2018-ன் கீழ் எதிரிகள் திருமதி.ஜீவா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், அரக்கோணம் மற்றும் திரு.ஈஸ்வரன், மோசூர் ஊராட்சி செயலாளர் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: விடுநர் S. முத்து ராஜா, வயது.29 த/பெ. சண்முகநாதன் எண்.73, 7-வது தெரு, எழில் நகர், அயப்பாக்கம், சென்னை. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர் மாவட்டம். அய்யா, நான் மேற்படி விலாசத்தில் என் அப்பா சண்முகநாதன், அம்மா பத்மாவதி மற்றும் என்னுடைய மனைவி ஆர்த்தி ஆகியோருடன் வசித்து வருகிறேன். நான் B.E (Mechanical) படித்துள்ளேன். நான் அப்பா சண்முகநாதன் அவர்களுடன் சேர்ந்து நாதன் டிரேடிங் என்ற பெயரில் தொழிலாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் விற்பனை செய்யும் கம்பெனியை என் அப்பா பெயரில் நடத்தி வருகிறேன். என்னுடைய தந்தை திரு.சண்முகநாதன் அவர்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு வேலூர் மாவட்டம் அரக்கோணம் தாலுக்கா மோசூர் ஊராட்சிக்கு உட்பட்ட சர்வே எண்.860/1, 860/3, 860/4, 861/3-ல் 6.00 ஏக்கர் நிலத்தினை வாங்கி அவருடைய பெயரில் அரக்கோணம் சார் பதிவாளர்

அலுவலகத்தில் பத்திர பதிவு செய்தார். மேற்படி சொத்தினை குடியியருப்பு மனைபிரிவுகளாக விற்பனை செய்ய முடிவு செய்து மேற்படி 6.00 ஏக்கர் நிலத்தில் 174 மனைப்பிரிவுகளை ஏற்படுத்தி அந்த மனைப்பிரிவுகளை மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டத்தின்கீழ் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு வேலூர் அலுவலகத்தின் அனுமதி பெற என்னுடைய அப்பா சண்முகநாதன் அவர்கள் கடந்த 14.02.2018 அன்று மனு கொடுத்து இருந்தார் அதன் பெயரில் துணை இயக்குநர் வேலூர் நகர் ஊரமைப்பு அவர்கள் கொள்கை அளவிலான ஒப்புதலை கடந்த மே 2019-ல் வட்டார வளர்ச்சி அலுவலர், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு முகவரியிட்டு அனுப்பி அதன் நகல் ஒன்றினை என்னுடைய அப்பாவிற்கு வழங்கப்பட்டது. அதன் பின்னர் 12.06.2019 அன்று நான் அரக்கோணம் வட்டார வளர்ச்சி அலுவலகம் சென்று என்னிடம் வைத்திருந்த வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு வழங்கிய ஒப்புதலை அங்கிருந்த அசோக் என்ற நபரிடம் காண்பித்து விவரம் கேட்க அவர் நிலத்தினை ஆய்வு செய்ய வருவார்கள் நீங்கள் அன்றைய தினம் நிலத்தில் தயாராக இருக்க வேண்டும் என்று சொல்லி என்னுடைய செல்போன் நம்பரை வாங்கி கொண்டார் அதன் பின் நான் 17.06.2019 அன்று காலை மீண்டும் அரக்கோணம் வட்டார வளர்ச்சி அலுவலகம் சென்று அந்த அலுவலகத்திலேயே பணி செய்யும் அசோக் என்ற நபரை மீண்டும் சந்தித்தேன் அப்போது அவர் அங்கு அமர்ந்திருந்த திருமதி.ஜீவா என்ற துணை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் என்னை அழைத்து சென்று அவரிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார் பின்னர் 17.06.2019 மதியம் சுமார் 14.45 மணிக்கு அரக்கோணத்தில் இருந்து மோசூரில் உள்ள எங்களுடைய நிலத்திற்கு (Site) திருமதி.ஜீவா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மோசூர் ஊராட்சி கிளார்க் திரு.ஈஸ்வரன் ஆகியோர் சென்றோம் நிலத்தினை ஆய்வு செய்து நாங்கள் தானசெட்டில்மென்டாக அரசுக்கு சாலை போக்குவரத்து வசதி, பூங்கா ஆகியவற்றை பொது உபயோகத்திற்காக (Open Space Reserve) ஒதுக்கியுள்ளது சம்மந்தமாக மனைப்பிரிவினை திருமதி.ஜீவா துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் திரு.ஈஸ்வரன், மோசூர் ஊராட்சி கிளார்க் ஆகியோர் ஆய்வு செய்தனர் அதன் பின்னர் திருமதி.ஜீவா மற்றும் திரு.ஈஸ்வரன் ஆகியோர்களுடன் அரக்கோணம் வட்டார வளர்ச்சி அலுவலகம் சென்றோம். அப்போது திருமதி.ஜீவா துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் நீங்கள் மொத்தம் 172 மனைப்பிரிவுகள் போட்டுள்ளீர்கள் ஒரு மனைப்பிரிவுக்கு ரூ.500/- வீதம் எனக்கு கொடுக்க வேண்டும் அப்போது தான் உங்களுடைய மனைப்பிரிவினை நான் ஆய்வு செய்தது சம்மந்தமாக ரிப்போர்ட் அனுப்ப முடியும் என்றார் அதற்கு நான் மேடம் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை நாங்கள் தான் OSR நிலத்தினை

முறையாக கொடுக்கிறோமே கவர்மென்ட் பீஸ் எவ்வளவு கட்டவேண்டும் என்று சொன்னால் அதனை கட்டிவிடுகிறேன் என்றேன் அதற்கு திருமதி.ஜீவா துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் கவர்மென்ட் பீஸ் தனியாக கட்டிதான் ஆகவேண்டும் நான் ஒரு பிளாட்டுக்கு ரூ.500/- என்று சொல்வது நான் ஆய்வு செய்ததற்கும் அந்த ரிப்போர்ட்டில் கையெழுத்து போடுவதற்கும் நான் அதனை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பினால் தான் நீ அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்தின் வரன்முறை ஆணையை பெறமுடியும், வளர்ச்சி கட்டணம் எவ்வளவு செலுத்த வேண்டும் என்று தெரிந்துகொள்ள முடியும் ஆகையால் ஒரு பிளாட்டுக்கு ரூ.500/- என்று மொத்தம் 172 பிளாட்டுக்கு மொத்தமாக ரூ.86,000/- எனக்கும் மோசூர் ஊராட்சி கிளார்க் திரு.ஈஸ்வரன் அவர்களுக்கு ரூ.10,000/- கொடுத்தால் தான் உங்களுடைய வேலை முடியும் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லி அங்கிருந்த சென்றுவிட்டேன். அதன் பின்னர் மீண்டும் 19.06.2019 அன்று அரக்கோணம் வட்டார வளர்ச்சி அலுவலகம் சென்று அங்கிருந்த மோசூர் ஊராட்சி கிளார்க் திரு.ஈஸ்வரன் அவர்களை சந்தித்தேன். அவர் ஜீவா மேடம் ஆபீஸில் இல்லை வெளியில் வேலையாக சென்றுள்ளார். ஜீவா மேடம் ஒரு பிளாட்டுக்கு ரூ.500/- என்று மொத்தம் 86,000/- கேட்கிறார் அதனை கொடுத்துவிடுங்கள் என்றார். அதற்கு நான் சார் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை பார்த்து செய்யுங்கள் சார் என்றேன். அதற்கு அவர் சரி மேடம் வெளியே வேலையாக சென்றுள்ளார் என்று சொல்லி அவரிடம் போனில் பேசினார். பின்னர் என்னிடம் 20.06.2019 அன்று திருமதி.ஜீவா துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களை வந்து சந்திக்குமாறு சொன்னதாக சொன்னார். அதனால் நான் மீண்டும் 20.06.2019 அன்று அரக்கோணம் வட்டார வளர்ச்சி அலுவலகம் சென்று திருமதி.ஜீவா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களை சந்தித்தேன். அவர் என்னை பார்த்தவுடன் என்னப்பா எவ்வளவு தான் கொடுப்ப நீயே சொல்லு நான் ஒரு பிளாட்டுக்கு 500/- கேட்டேன் நீ ஒத்துவரமாட்டன்ற எவ்வளவு தான் கொடுப்ப சொல்லு என்றார். அதற்கு நான் மேடம் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை நீங்கள் பார்த்து செய்யுங்கள் என்றேன். அதற்கு அவர் ஒரு பிளாட்டுக்கு ரூ.350/- என்று மொத்தம் 172 பிளாட்டுக்கு கணக்கு போட்டு கொடுத்துவிடு என்றார் அதன் பின்னர் நான் மீண்டும் அவரிடம் கெஞ்சிகேட்டபோது கடைசியாக ஒரு பிளாட்டுக்கு ரூ.300/- என்று மொத்தம் உள்ள 172 பிளாட்டுக்கு ரூ.51,600/- கொடுத்துவிடு என்றார் பின்னர் திரு.ஈஸ்வரன் அவர்களுக்கு ரூ.10,000/- தனியாக கொடுத்துவிடு என்றார் நான் பணம் கொடுக்க கூடிய நிலையில் இல்லை என்று எவ்வளவோ சொல்லியும் சரி எனக்கு ரூ.51,600/-ம் மோசூர் ஊராட்சி கிளார்க் திரு.ஈஸ்வரன் அவர்களுக்கு ரூ.5,000/- ஆக மொத்தம் ரூ.56,600/- கொடுத்துவிடு இது தான் பைனல் நீ அடுத்த முறை பணத்துடன் என்னை வந்து பார் அப்போது தான் உன் வேலை

முடியும் அரக்கோணம் ஊராட்சி ஒன்றிய மனைப்பிரிவு வரன்முறை படுத்தும் ஆணையை பெறமுடியும், தானசெட்டில்மென்ட் செய்யமுடியும், நீயும் உன் அப்பாவும் பிளாட்டை விற்பனை செய்ய முடியும் நான் கேட்ட ரூ.56,600/- கொடுக்காமல் எதுவும் நடக்காது என்று சொல்லி பணத்துடன் அரக்கோணம் ரயில்வே ஜங்ஷன் வந்து அவருடைய செல்போனிற்கு போன் செய்தால் அவர் வந்து பணத்தை வாங்கி கொள்வதாக சொல்லி என்னை அனுப்பிவிட்டார் நான் என்ன செய்வது என்று தெரியாமல் வெளியே வந்தபோது மோசூர் ஊராட்சி கிளார்க் திரு.ஈஸ்வரன் அவர்கள் அலுவலகத்திற்கு உள்ளே நுழைந்தார் என்னை பார்த்தவுடன் என்ன மேடத்தை பார்த்துவிட்டீர்களா மேடம் எவ்வளவுன்னு பைனல் செய்து விட்டாங்களா என்றார். அதற்கு நான் சார் பணம் ரூ.56,600/- கேட்கிறார்கள் அதில் ரூ.5,000/- உங்களுக்கு என்று ஜீவா மேடம் சொன்னார் என்றேன் அதற்கு திரு.ஈஸ்வரன் அதுவே கம்மியான தொகை மேடம் உங்களுக்கு தான் இவ்வளவு கம்மியா சொல்லியிருக்காங்க பணத்தை இப்போது தரப்போரீங்களா என்றார் அதற்கு இல்லை சார் என்றேன். அவரும் சரி பணத்தை ரெடி செய்து கொண்டு வாங்க என்று சொன்னார். நான் அங்கிருந்து சென்னைக்கு என்னுடைய வீட்டிற்கு சென்றுவிட்டேன். இது சம்மந்தமாக என் அப்பா திரு.சண்முகநாதன் அவர்களிடம் சொன்னேன். அதற்கு அவர் நாம் ஏன் லஞ்சமாக இவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் கவர்மென்ட் பீஸ் என்னவோ அது மட்டும் கட்டினால் போதும் என்றார். திருமதி.ஜீவா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் திரு.ஈஸ்வரன் மோசூர் ஊராட்சி செயலாளர் ஆகியோர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.56,600/-ஐ கொடுத்து எங்களுடைய செல்வ விநாயகர் நகர் மனைப்பிரிவிற்கு அரக்கோணம் ஊராட்சி ஒன்றிய வரன்முறை ஆணை பெற விருப்பமில்லை. ஆகையால் திருமதி.ஜீவா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், அரக்கோணம் மற்றும் திரு.ஈஸ்வரன், மோசூர் ஊராட்சி செயலாளர் ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், வேலூர் மண்டலம் அவர்களின் கொள்கை அளவிலான வழங்கிய ஒப்புதலின் நகலை இணைத்துள்ளேன். இப்படிக்கு ஒப்பம் XXXXXX S.Muthuraja, 21/6/19. Sir, The complaint given by Tr.S.Muthu Raja, S/o Shanmuganathan, residing at No.73, 7th Street, Ezhil Nagar, Ayapakkam, Chennai was received on 21.06.2019 at 07.00 hrs. After verifying the antecedents of accused and credibility of the complainant with the approval of superiors and concurrence from the DVAC registered a case in Vellore Detachment, Vigilance and Anti Corruption Cr.No.12/2019 u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.30 hrs. sd/xxxxxx (S.Vijay) 21.06.2019 Inspr. of Police, V&AC, Vellore.

Sir,

The registered Original First Information Report along with complaint, copy of order of the Deputy Director, Town and Country Planning, Vellore Region, Vellore is sent to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Vellore and other copies of FIR to the officers' concerned.

**Enclosures:**

1. Compliant of Tr.S.Muthu Raja, S/o Shanmuganathan, No.73, 7th Street, Ezhil Nagar, Ayapakkam, Chennai, dt:21.06.2019.
2. The copy of order of the Deputy Director, Town and Country Planning, Vellore Region, Vellore

21/06/19